# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 21–09–2017 ம் தேதி வியாழக்கிழமை நடைபெற்ற சாதாரணரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 24–08–2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெண்டு கடவு பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2016–2017–ன் கீழ் கட்டப்பட்டுள்ள Community Toilet அருகில் உள்ள குழித்துறை பெண்டு கடவு கிணற்றிலிருந்து 1.50 H.P Motar மூலம் நீரேற்றி Water Supply Arrangement செய்தல் | 0.50 | 1) திரு.எஸ். பாபு<br>2) திரு.A ஆன்றணி | 0.42% குறைவு<br>1.02% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு. பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2962**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 2

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2017–2018–ன்கீழ் கீழ்காணும் பணியினை செய்வதற்கு 24–08–2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி குப்பை சேகரிக்கும் மின்கல வண்டி வினியோகம் செய்தல் | 2.25 | 1) M/S. ஜெயபாபா டிரேடர்ஸ், பாசர் தெரு, தாழகுடி<br>2) M/S. Dilan Exports Imports and Trading Nagercoil. | 0.22% குறைவு<br>0.36% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 M/S. ஜெயபாபா டிரேடர்ஸ் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2963,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு வெளியூர் மற்றும் உள்ளூர் சென்ற வகைக்கு அலுவலகப் பணியாளர்கள் பயணப்படி வழங்க உரிய மனு அளித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் 2017–2018–ம் ஆண்டிற்கு பயணப்படியாக ரூ.75,000/– அனுமதித்திட உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2964,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN75L.0828 அதிக தூரம் இயக்கப்பட்டுள்ளதால் வாகனத்தின் டயர்கள் தேய்ந்த நிலையிலுள்ளது. மேலும் வாகனத்தில் பல்வேறு பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் பழுதுகள் நீக்கம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்திலுள்ள பழுதுகளை அரசால் அங்கீகரிக்கப்பட்ட Kodai Cards நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.50,000/– மற்றும் ஈப்பிற்கு தேவையான 4 டயர்கள், உதவி டயர்–1, மொத்தம் 5 டயர்கள் வாங்குவதற்கு M/s. சொக்கலிங்க நாடார் டயர் சோன் மார்த்தாண்டம் நிறுவனம் விலைப்புள்ளி மூலம் உத்தேச மதிப்பீடு ரூ.38,000/–ற்கும் பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகளை Kodai Cards நிறுவனம் மூலம் பழுது

நீக்கம் செய்யவும், 5 டயர்கள் M/s. சொக்கலிங்க நாடார் டயர் சோன் மூலம் வாங்குவதற்கும், அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2965**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75P.1813–ன் கிளட்ச் பழுதாகி உள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் கிளட்ச் Haribalakrishna Automobiles நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்வதற்கு மதிப்பீடு ரூ.19,506/– வருவாய் நிதியில் செலவிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2966**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75J.8227–ன் பேட்டரி பழுதாகியுள்ளதால் மேற்படி பேட்டரியை மாற்றி புதிய பேட்டரி வாங்கி பொருத்துவதற்கு 4–7–2017 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) Manickam Battery works - ரூ. 6500/–
2) Power Zone Batteries - ரூ. 7300/–
3) Imperial Battery Service - ரூ. 7100/–

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை அங்கீகரிக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2967**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75J.8227–க்கு **5–9–2017** அன்று தகுதி சான்று முடிவடைவதால் **2017–2018–**ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்வதற்கு M/s. ABT Industries(Ltd.) நிறுவனம் மூலம் ரூ.**84527**/–ற்கு மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. மேற்படி பழுதுகளை M/s. ABT Industries நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண்.2968</u>**
**அனுமதிக்கப்பட்டது**

ஒப்பம்/–
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.